# பொருளடக்கம்

❊

குகைவாசிகள் கொள்கைப் பாதை 8

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 15

- பதிப்பக அறம் 15
- வெளியீடுகளின் வகைப்பாடு 16
- மொழிபெயர்ப்பு குறித்த நிலைப்பாடு 16
- தனித்தன்மைகள் 18

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

1 உயிர் கைப்பற்றப்படுவதற்கு சற்று முன் 23

1. பரிசுத்தமும் உயர்வும் மிக்க அல்லாஹ் நம்பிக்கையாளரின் உயிரைக் கைப்பற்றுவதில் தடுமாறுதல் 23
2. மரணத் தருவாயில் ஷைத்தான் ஆஜராகுதல் 24

2 மரண வேளையில் நிகழ்வது 25

1. தனக்கு மரணம் ஏற்படும்போது இறைநிராகரிப்பாளன் உலக வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டுமென்று கோரிக்கை வைப்பது 25
2. ஸகராத்துல் மவ்த் – மரணத்தின் மயக்கங்கள், வேதனைகள் 25
3. மரண வேளையில் நிராகரிப்பாளன் இறைநம்பிக்கைகொள்வது ஏற்படுவதில்லை 26

3 உயிர் கைப்பற்றப்பட்ட பின்பு நிகழ்பவை 28

1. அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவரின் உயிர் அல்லாஹ்வை புகழ்ந்த நிலையில் வெளியேறும் 28
2. உயிர் கைப்பற்றப்பட்டு எடுத்துச் செல்லப்படும்போது பார்வை அதைப் பின்தொடரும் 29
3. மண்ணறை நெருக்கும் 30
4. மரணித்தவர்களுக்கு மண்ணறையில் வைத்து அவர்களின்

சிந்தனை சக்தி திருப்பிக் கொடுக்கப்படும் 31
5. மண்ணறைக்குள் கேள்வி கேட்கப்படுவது எப்போது? 31
6. கேள்வி கேட்பதற்காக இரண்டு வானவர்கள் வருவார்கள் 31
7. இறந்தவரிடம் வரக்கூடிய அந்த இரண்டு வானவர்களின் பெயர்களும் தன்மைகளும் 32
8. மண்ணறையில் இறைநம்பிக்கையாளர்களை அல்லாஹ் உறுதிப்படுத்துவான் 32
9. இறைநம்பிக்கையாளருக்கு நரகம் காட்டப்படும்; அதைவிட்டு அல்லாஹ் அவரைப் பாதுகாத்ததை உணர்த்த. 33
10. இறைமறுப்பாளன் சம்மட்டியால் அடிக்கப்படுவான்; அதனால் அவன் மண்ணாக மாறிவிடுவான். 36
11. நம்பிக்கையாளர்களின் உயிர்கள் இருக்குமிடத்தில் இந்த உயிரும் உலகத்தின் துக்கங்களைவிட்டு நிம்மதி அடையும் 46
12. மனிதனின் மறுமைத் தங்குமிடம் சொர்க்கமோ, நரகமோ எதுவாக இருந்தாலும் அது மண்ணறை வாழ்க்கை தொடர்ச்சியாக எடுத்துக்காட்டப்படும் 48
13. மண்ணறைகளில் வேதனை செய்யப்படுவோரின் அலறல் சப்தங்களை மிருகங்கள் செவியுறும் 48
14. மறுமையின் தங்குமிடங்களில் முதல் தங்குமிடம் மண்ணறை 49
15. பாவங்களில் ஈடுபட்டோரின் மண்ணறைகள் இருளால் நிரம்பியிருக்கும் 49
16. உயிருடன் இருப்பவர்கள் மண்ணறை வேதனையை செவியுறுவதற்குச் சக்தி பெறமாட்டார்கள் 49
17. மறுமைநாளுக்கு முன்பே சொர்க்கத்து மரத்தின் கனியைச் சாப்பிடலாம் 50
18. இறைநம்பிக்கையாளரின் உயிர் அவருடைய கடனுடன் பிணைக்கப்பட்டிருக்கும் 50
19. இறைநம்பிக்கைகொண்ட அடியாருக்காக வானத்தில் உள்ள வானவர்கள் பிரார்த்தனை செய்வார்கள் 50

20. இறந்தவர் மண்ணறையில் 'என்னை விடுங்கள்; நான் தொழப் போகிறேன்' என்பார் 53

21. வணக்கம், மார்க்கம் ஆகியவை தவிர்த்து வேறு எதுவும் அடியானிடம் மண்ணறையில் கேட்கப்படாது 53

22. மரணித்தவர்கள் பூமியின் மேல் நடப்பவற்றைச் செவியுறமாட்டார்கள் 55

23. பாழுங்கிணற்றில் போடப்பட்ட நபியின் விரோதிகள் நபியின் பேச்சைச் செவியுற்றனர். ஆனால், பதில் பேச அவர்களுக்கு ஆற்றல் இருக்கவில்லை 55

24. உயிர்த்தியாகிகளுக்கான கூலியும் அவர்களின் ஆசையும் 55

4 பாவிகளுக்கு மண்ணறையில் உடல்ரீதியான வேதனை 57

5 மண்ணறை வேதனைக்குக் காரணமாகும் பாவங்கள் 65

1. குர்ஆனைப் பெற்று (மனனம் செய்து) அதைப் புறக்கணித்தவர் கடமையாக்கப்பட்ட தொழுகையை விட்டுவிட்டுத் தூங்கியவர் 65

2. பொய் பேசுவதற்கான வேதனை 66

3. விபச்சாரம் செய்வோருக்கான வேதனை 67

4. வட்டி உண்பவருக்கான வேதனை 67

5. மரணித்தவருக்காக ஒப்பாரி வைக்கப்படுவதால் அவர் வேதனை செய்யப்படுவது 68

6. மரணித்தவரின் குடும்பத்தவர் அவர் தொடர்பாகக் கூறும் சில வார்த்தைகளால் அவர் வேதனை செய்யப்படுவது 69

7. கோள் பேசித் திரிபவருக்கான வேதனை 69

8. சிறுநீர் கழிக்கும்போது மறைக்காமல் இருப்பவர் அல்லது சிறுநீரிலிருந்து சுத்தமாக இல்லாதவருக்கான வேதனை 70

6 நபிமார்களும் பர்ஸக் (திரைமறைவு) நிலையும் 71

7 மரணத்துக்குப் பின் பயனளிப்பவை 82

8 மண்ணறை வேதனையிலிருந்து காப்பவை 85

# 1

# உயிர் கைப்பற்றப்படுவதற்கு சற்று முன்

✿

## 1. பரிசுத்தமும் உயர்வும் மிக்க அல்லாஹ் நம்பிக்கையாளரின் உயிரைக் கைப்பற்றுவதில் தடுமாறுதல்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

إِنَّ اللَّهَ قَالَ: مَنْ عَادَى لِي وَلِيًّا فَقَدْ آذَنْتُهُ بِالحَرْبِ، وَمَا تَقَرَّبَ إِلَيَّ عَبْدِي بِشَيْءٍ أَحَبَّ إِلَيَّ مِمَّا افْتَرَضْتُ عَلَيْهِ، وَمَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتَّى أُحِبَّهُ، فَإِذَا أَحْبَبْتُهُ: كُنْتُ سَمْعَهُ الَّذِي يَسْمَعُ بِهِ، وَبَصَرَهُ الَّذِي يُبْصِرُ بِهِ، وَيَدَهُ الَّتِي يَبْطِشُ بِهَا، وَرِجْلَهُ الَّتِي يَمْشِي بِهَا، وَإِنْ سَأَلَنِي لَأُعْطِيَنَّهُ، وَلَئِنِ اسْتَعَاذَنِي لَأُعِيذَنَّهُ، وَمَا تَرَدَّدْتُ عَنْ شَيْءٍ أَنَا فَاعِلُهُ تَرَدُّدِي عَنْ نَفْسِ المُؤْمِنِ، يَكْرَهُ المَوْتَ وَأَنَا أَكْرَهُ مَسَاءَتَهُ

அல்லாஹ் கூறுகிறான்: எவர் எனது நேசர் ஒருவரைப் பகைக்கி றாரோ அவருக்கு எதிராக நான் போர் அறிவிப்புச் செய்கிறேன். என்னுடைய அடியான் நான் அவன்மீது கடமையாக்கியுள்ள வணக்கத்தைவிட எனக்கு மிகப் பிரியமான எதையும் செய்து என்னை நெருங்கிவிட முடியாது. என் அடியான் உபரியான வணக்கங்கள் மூலம் என்னை நெருங்கிக்கொண்டே இருப்பான். இறுதியில் நான் அவனை நேசிப்பேன். அவனை நான் நேசிக்கும் போது அவன் கேட்கும் செவியாகவும், அவன் பார்க்கும் பார்வையாகவும், அவன் பிடிக்கும் கையாகவும், அவன் நடக்கும் காலாகவும் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் அவ னுக்கு நான் கொடுப்பேன். அவன் என்னிடம் பாதுகாவல் தேடி னால் அவனை நான் பாதுகாப்பேன். இறைநம்பிக்கையாளனின் உயிர் விசயத்தில் நான் தடுமாறுவது[1] போல் நான் செய்யும் எது

---

1 இந்த நபிமொழியைக் குறிப்பிட்ட பின் ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா

# 2

## மரண வேளையில் நிகழ்வது

✿

1. தனக்கு மரணம் ஏற்படும்போது இறைநிராகரிப்பாளன் உலக வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டுமென்று கோரிக்கை வைப்பது

அல்லாஹுத் தஆலா கூறுகிறான்:

حَتَّىٰ إِذَا جَاءَ أَحَدَهُمُ الْمَوْتُ قَالَ رَبِّ ارْجِعُونِ لَعَلِّي أَعْمَلُ صَالِحًا فِيمَا تَرَكْتُ كَلَّا إِنَّهَا كَلِمَةٌ هُوَ قَائِلُهَا وَمِنْ وَرَائِهِمْ بَرْزَخٌ إِلَىٰ يَوْمِ يُبْعَثُونَ

(அல்லாஹ்வை நிராகரித்துக்கொண்டிருக்கின்ற) அவர்களில் ஒருவனுக்கு மரணம் வந்தாலோ (அவன் தன் இறைவனை நோக்கி), 'என் இறைவனே! என்னை (உலகத்திற்கு)த் திரும்ப அனுப்பிவிடு. நான் விட்டு வந்த அந்த உலகத்தில் இனி நல்ல செயல்களையே நான் செய்துகொண்டிருப்பேன்' என்று கூறுவான். எனினும், அது ஆகக்கூடியது இல்லை. (இத்தகைய சந்தர்ப்பங்களில்) அவன் கூறக்கூடியது வெறும் வார்த்தையே (தவிர வேறில்லை). அவர்களுக்கு முன் ஓர் அரண் ஏற்பட்டுவிடும். (உயிர் கொடுத்து) எழுப்பப்படக்கூடிய நாள் வரை அதில் தங்கிவிடுவார்கள். (குர்ஆன் 23:99,100)

2. ஸகராத்துல் மவ்த் – மரணத்தின் மயக்கங்கள், வேதனைகள்

ஆயிஷா ﵂ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ بَيْنَ يَدَيْهِ رَكْوَةٌ أَوْ عُلْبَةٌ فِيهَا مَاءٌ، يَشُكُّ عُمَرُ فَجَعَلَ يُدْخِلُ يَدَيْهِ فِي المَاءِ، فَيَمْسَحُ بِهِمَا وَجْهَهُ، وَيَقُولُ: لاَ إِلَهَ إِلَّا اللَّهُ، إِنَّ لِلْمَوْتِ سَكَرَاتٍ ثُمَّ نَصَبَ يَدَهُ فَجَعَلَ يَقُولُ: فِي الرَّفِيقِ الأَعْلَى حَتَّى قُبِضَ وَمَالَتْ يَدُهُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் மரண வேளையில் அவர்களுக்கு முன்பாகத் தண்ணீருள்ள ஒரு சிறு பாத்திரம் இருந்தது.

# 3

# உயிர் கைப்பற்றப்பட்ட பின்பு நிகழ்பவை

✿

இறைநம்பிக்கைகொண்ட அடியானின் உயிர் வெளியேறுவது இலகுவாக இருக்கும். இறைமறுப்பாளனின் உயிர் வெளியேறுவது கடினமாக இருப்பதால் அது அவனுக்கு வேதனையாக அமையும். இறைநம்பிக்கையாளனின் உயிர் வியர்த்தலுடன் வெளியேறும். இறைமறுப்பாளனின் உயிர் அவனுடைய நாடியிலிருந்து கழுதை யின் உயிர் வெளியாவதுபோல் வெளியேறும்.[3]

இறைநம்பிக்கைகொண்ட அடியானின் உயிர் பூமியில் இருக்கும் கஸ்தூரியிலேயே மிகவும் நறுமணம் வீசக்கூடிய நிலையில் வெளியேறும். இறைமறுப்பாளனின் உயிர் பூமியில் இருக்கும் பிணத்தின் வாடையிலேயே மிக மோசமான வாடை வீசக்கூடிய நிலையில் வெளியேறும்.

## 1. அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவரின் உயிர் அல்லாஹ்வை புகழ்ந்த நிலையில் வெளியேறும்

இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் அறிவிப்பதாவது: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ الْمُؤْمِنَ بِكُلِّ خَيْرٍ عَلَى كُلِّ حَالٍ، إِنَّ نَفْسَهُ تَخْرُجُ مِنْ بَيْنِ جَنْبَيْهِ وَهُوَ يَحْمَدُ اللَّهَ عَزَّ وَجَلَّ

நிச்சயமாக இறைநம்பிக்கையாளன் எல்லா நிலையிலும் எல்லா நன்மையுடனும் இருப்பான். அவன் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவனுடைய உயிர் அவனது இரண்டு

---

3 இந்தக் கருத்தைக்கொண்ட நபிமொழி இடம்பெறும் நூல்: தப்ரானீயின் அல்முஅஜமுல் கபீர். மேலும் பார்க்க: ஸில்ஸிலத்துல் அஹாதீஸ் அஸ்ஸஹீஹா 2151)

## 4. மரணித்தவர்களுக்கு மண்ணறையில் வைத்து அவர்களின் சிந்தனை சக்தி திருப்பிக் கொடுக்கப்படும்

அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيهِ وسَلَّم ذَكَرَ فَتَّانَ الْقَبْرِ فَقَالَ عُمَرُ بْنُ الْخَطَّابِ، رَضِيَ اللهُ عَنْهُ: أَتُرَدُّ إِلَيْنَا عُقُولُنَا يَا رَسُولَ اللهِ ؟ فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيهِ وسَلَّم: نَعَمْ، كَهَيْئَتِكُمُ الْيَوْمَ قَالَ عُمَرُ: فَفِيهِ الْخَبَرُ

ஒரு முறை அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மண்ணறையின் சோதனைகள் பற்றிக் கூறினார்கள். அப்போது உமர் ﷺ அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! அப்போது எங்களின் சிந்தனை சக்தி எங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுமா?' என்று வினவினார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் 'ஆம், இன்று உமது நிலை இருப்பது போலவே' என்று விடையளித்தார்கள். அப்போது உமர் ﷺ அவர்கள் 'அந்தச் சோதனையில் தோற்றவரின் வாயில் கல்தான் விழும்' என்றார்கள். (முஸ்னது அஹ்மது 6603, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 3553)

இறந்தவர் தன்னைச் சார்ந்தவர்கள் (தன்னை அடக்கம் செய்துவிட்டு) தன்னிடமிருந்து திரும்பும்போது அவர்களின் காலணி ஓசையை கேட்பார்.

## 5. மண்ணறைக்குள் கேள்வி கேட்கப்படுவது எப்போது?

அடக்கம் செய்த பின் அவருக்கான கேள்விக்கணக்கு ஆரம்பமாகும்.

كَانَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا فَرَغَ مِنْ دَفْنِ الْمَيِّتِ وَقَفَ عَلَيْهِ فَقَالَ: اسْتَغْفِرُوا لِمَيِّتِكُمْ وَسَلُوا لَهُ التَّثْبِيتَ، فَإِنَّهُ الْآنَ يُسْأَلُ

நபி ﷺ அவர்கள் ஒரு சடலத்தை அடக்கம் செய்து முடித்தால், அங்கு நின்று 'உங்களின் சகோதரருக்காகப் பாவமன்னிப்புத் தேடுங்கள்; அவருக்கு உறுதிப்பாட்டையும் கேளுங்கள். ஏனெனில், அவர் இப்போது கேள்வி கேட்கப்படுகிறார்' என்று கூறுவார்கள். (அறிவிப்பு: உஸ்மான் இப்னு அஃப்ஃபான் ﷺ, சுனனு அபீ தாவூது 3221, ஸஹீஹுல் ஜாமிஃ 945)

## 6. கேள்வி கேட்பதற்காக இரண்டு வானவர்கள் வருவார்கள்

## 7. இறந்தவரிடம் வரக்கூடிய அந்த இரண்டு வானவர்களின் பெயர்களும் தன்மைகளும்

அபூ ஹுறைறா ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِذَا قُبِرَ الْمَيِّتُ أَتَاهُ مَلَكَانِ أَسْوَدَانِ أَزْرَقَانِ يُقَالُ لِأَحَدِهِمَا الْمُنْكَرُ وَلِلْآخَرِ النَّكِيرُ فَيَقُولَانِ مَا كُنْتَ تَقُولُ فِي هَذَا الرَّجُلِ فَيَقُولُ مَا كَانَ يَقُولُ هُوَ عَبْدُ اللَّهِ وَرَسُولُهُ، أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، فَيَقُولَانِ: قَدْ كُنَّا نَعْلَمُ أَنَّكَ تَقُولُ هَذَا

இறந்தவர் அடக்கம் செய்யப்பட்டுவிட்டால் அவரிடம் கறுப்பாகவும் நீள நிறமாகவும் உள்ள இரண்டு வானவர்கள் வருவார்கள். அவர்களில் ஒருவருக்கு முன்கர் என்றும் மற்றொருவருக்கு நகீர் என்றும் கூறப்படும். அவர்கள் இருவரும் அம்மனிதரிடம் 'இந்த மனிதர் விசயத்தில் நீ என்ன சொல்லிக்கொண்டிருந்தாய்' என்று (நபியவர்களைக் குறித்து) கேட்பார்கள். அப்போது அவர் இறைநம்பிக்கையாளராக இருந்தால் 'அவர் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும் ஆவார். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது ﷺ அவர்கள் அவனது அடியாரும் தூதருமாவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்' என்று கூறுவார். அப்போது அவ்விரு வானவர்களும் 'நீர் இவ்வாறு சொல்வீர் என்பதை நாங்கள் அறிந்தே இருந்ததோம்' என்று கூறுவார்கள். *(சுனனுத் திர்மிதீ 1071, அஸ்ஸஹீஹா 1391)*

## 8. மண்ணறையில் இறைநம்பிக்கையாளர்களை அல்லாஹ் உறுதிப்படுத்துவான்

பறாஉ இப்னு ஆஸிப் ﷺ அவர்கள் அறிவிக்கும் நபிமொழியாகும்:

إِذَا أُقْعِدَ الْمُؤْمِنُ فِي قَبْرِهِ أُتِيَ، ثُمَّ شَهِدَ أَنْ لاَ إِلَهَ إِلَّا اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ، فَذَلِكَ قَوْلُهُ: يُثَبِّتُ اللَّهُ الَّذِينَ آمَنُوا بِالقَوْلِ الثَّابِتِ

இறைநம்பிக்கையாளர் அவருடைய மண்ணறைக்குள் உட்கார வைக்கப்படும்போது வானவர்கள் வருவார்கள். பின்பு அவர் 'அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ், வ அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹ்' என்று சொல்வார். இதுவே அல்லாஹ் இறைநம்பிக்கைகொண்டவர்களை உறுதியான சொல்லைக் கொண்டு உறுதிப்படுத்துவான் என்று கூறுவதின் விளக்கமாகும். *(புகாரீ 1369, முஸ்லிம் 2871)*

## 14. மறுமையின் தங்குமிடங்களில் முதல் தங்குமிடம் மண்ணறை

ஹானி ﷺ அவர்கள் கூறினார்கள்: உஸ்மான் ﷺ அவர்கள் ஏதேனும் மண்ணறைக்கருகில் நின்றால் தமது தாடி நனையும் அளவுக்கு அழுவார்கள். அதனால் அவர்களிடம் 'நீங்கள் சொர்க்கத்தையும் நரகத்தையும் நினைவுகூர்கின்றீர்கள். அப்போது நீங்கள் அழுவ தில்லை. ஆனால் மண்ணறையை நினைவுகூர்ந்ததும் அழுகிறீர் களே?' என்று வினவப்பட்டது. அதற்கவர்கள்,

إِنَّ الْقَبْرَ أَوَّلُ مَنَازِلِ الْآخِرَةِ، فَإِنْ نَجَا مِنْهُ فَمَا بَعْدَهُ أَيْسَرُ مِنْهُ، وَإِنْ لَمْ يَنْجُ مِنْهُ فَمَا بَعْدَهُ أَشَدُّ مِنْهُ قَالَ وَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا رَأَيْتُ مَنْظَرًا قَطُّ إِلَّا الْقَبْرُ أَفْظَعُ مِنْهُ

மண்ணறை என்பது மறுமையின் தங்குமிடங்களில் முதல் தங்குமிடமாகும். அதில் ஈடேற்றம் அடைந்துவிட்டால் அதற்குப் பின்னர் வருவது அதைவிட இலகுவானதாக இருக்கும். அதில் ஈடேற்றம் அடையாவிட்டால் அதற்குப் பின்னர் வருவது அதைவிடக் கடினமானதாக இருக்கும் என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் எனக் கூறினார்கள்.

மண்ணறையைவிட பயங்கரமான எந்தக் காட்சியையும் நான் அறவே கண்டதில்லை என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேன் என்றும் தொடர்ந்து கூறினார்கள். *(திர்மிதீ 2308, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 3550)*

## 15. பாவங்களில் ஈடுபட்டோரின் மண்ணறைகள் இருளால் நிரம்பியிருக்கும்

அபூ ஹுறைறா ﷺ கூறியது, நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ هَذِهِ الْقُبُورَ مَمْلُوءَةٌ ظُلْمَةً عَلَى أَهْلِهَا، وَإِنَّ اللهَ عَزَّ وَجَلَّ يُنَوِّرُهَا لَهُمْ بِصَلَاتِي عَلَيْهِمْ

நிச்சயமாக இந்த மண்ணறைகள் அவற்றில் உள்ளவர்களுடன் இரு ளால் நிரம்பியிருக்கின்றன. நிச்சயமாகக் கண்ணியமும் மகத்துவ முமிக்க அல்லாஹ் அவர்களுக்காக நான் செய்யும் பிரார்த்தனையின் மூலம் அவற்றை அவர்களுக்கு ஒளிமயமாக்குவான். *(முஸ்லிம் 956)*

## 16. உயிருடன் இருப்பவர்கள் மண்ணறை வேதனையை செவியுறுவதற்குச் சக்தி பெறமாட்டார்கள்

அனஸ் ﷺ அறிவிப்பது, நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

அதனால் அவன் கடுமையாகச் சப்தமிடுவான். அந்தச் சப்தத்தை மனித ஜின் இனத்தைத் தவிர மற்ற படைப்புகளெல்லாம் செவியுறும்.[9] (சுனனு அபீதாவூது 4751, ஸஹீஹுல் ஜாமிஃ 1930)

## 22. மரணித்தவர்கள் பூமியின் மேல் நடப்பவற்றைச் செவியுறமாட்டார்கள்

فَإِنَّكَ لَا تُسْمِعُ الْمَوْتَى وَلَا تُسْمِعُ الصُّمَّ الدُّعَاءَ إِذَا وَلَّوْا مُدْبِرِينَ

நிச்சயமாக நீர் இறந்தவர்களைக் கேட்கச் செய்ய முடியாது. புறக் கணித்துத் திரும்பிக்கொள்கிற செவிடர்களையும் (உம்முடைய) அழைப்பை நீர் கேட்க செய்ய முடியாது. (குர்ஆன் 30:52)

## 23. பாழுங்கிணற்றில் போடப்பட்ட நபியின் விரோதிகள் நபியின் பேச்சைச் செவியுற்றனர். ஆனால், பதில் பேச அவர்களுக்கு ஆற்றல் இருக்கவில்லை

இப்னு உமர் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

اطَّلَعَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى أَهْلِ القَلِيبِ، فَقَالَ: وَجَدْتُمْ مَا وَعَدَ رَبُّكُمْ حَقًّا؟ فَقِيلَ لَهُ: تَدْعُو أَمْوَاتًا؟ فَقَالَ: مَا أَنْتُمْ بِأَسْمَعَ مِنْهُمْ، وَلَكِنْ لاَ يُجِيبُونَ

(பத்ருப் போரில் கொல்லப்பட்ட எதிரிகளின் உடல்கள் ஒரு பாழுங்கிணற்றில் போடப்பட்டிருந்தன. அந்தக்) கிணற்றில் கிடந்தவர்களைப் பார்த்த நபி ﷺ அவர்கள் 'உங்களுடைய இறை வன் உண்மையாகவே வாக்களித்தவற்றை நீங்கள் அடைந்து கொண்டீர்களா?' எனக் கேட்டார்கள். 'இறந்துவிட்டவர்களை அழைக்கிறீர்களே?' என அவர்களிடம் கேட்கப்பட்டதும், 'அவர்களைவிட நீங்கள் அதிகம் செவியேற்பவர்கள் அல்ல. ஆயினும், அவர்கள் பதிலளிக்கமாட்டார்கள்' எனக் கூறினார்கள். (புகாரீ 1370, முஸ்லிம் 2874)

## 24. உயிர்த்தியாகிகளுக்கான கூலியும் அவர்களின் ஆசையும்

அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய்து பர்ஸத் வாழ்க்கை யில் இருந்த நபித்தோழர்கள் உயிர்த்தியாகிகளுக்காகத் தயார்

---

9 நூல்கள்: அஹ்மது, அபூதாவூது பார்க்க: ஸஹீஹ் சுனனி அபீதாவூது (3977) இதன் மூலக்கருத்து புகாரீ, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் உள்ளது. மேலும் பார்க்க: ஸில்ஸிலத்துல் அஹாதீஸ் அஸ்ஸஹீஹா (1344)

# 5

## மண்ணறை வேதனைக்குக் காரணமாகும் பாவங்கள்

✿

1. குர்ஆனைப் பெற்று (மனனம் செய்து) அதைப் புறக்கணித்தவர் கடமையாக்கப்பட்ட தொழுகையை விட்டுவிட்டுத் தூங்கியவர்

وَإِنَّـا أَتَيْنَا عَلَى رَجُلٍ مُضْطَجِـعٍ، وَإِذَا آخَرُ قَائِمٌ عَلَيْهِ بِصَخْرَةٍ، وَإِذَا هُوَ يَهْوِي عَلَيْهِ بِالصَّخْرَةِ لِرَأْسِـهِ، فَيَثْلَغُ بِهَا رَأْسَـهُ، فَيَتَدَهْدَا الْحَجَرُ هَاهُنَا، فَيَتْبَعُ الْحَجَرَ يَأْخُذُهُ، فَمَا يَرْجِعُ إِلَيْهِ حَتَّى يَصِحَّ رَأْسُهُ كَمَا كَانَ، ثُمَّ يَعُودُ عَلَيْهِ، فَيَفْعَلُ بِهِ مِثْلَ مَا فَعَلَ الْمَرَّةَ الْأُولَى

சமுரா இப்னு ஜுன்துப் ﷺ அவர்கள் அறிவிக்கும் நீண்ட நபி மொழியை முன்பு கண்டோம். அதில் இடம்பெற்றிருப்பது: நாங்கள் ஒருக்களித்துப் படுத்திருந்த ஒரு மனிதருக்கருகில் சென்றோம். அவருக்கருகில் மற்றொருவர் ஒரு பாறாங்கல்லுடன் நின்றுகொண்டிருந்தார். அப்போதவர் குனிந்து படுத்திருப்பவரின் தலையை அந்தப் பாறாங்கல்லால் நசுக்குகிறார். அப்போது அந்தப் பாறாங்கல் சற்று தூரத்துக்கு உருண்டு செல்கிறது. அவர் அந்தக் கல்லைத் தொடர்ந்து சென்று எடுக்கிறார். அவர் திரும்பி வருவதற்குள் அவருடைய தலை முன்பு இருந்ததுபோல் சரியாகிவிடுகிறது. அவர் மீண்டும் அவரிடம் வந்து முதலில் செய்தது போலவே செய்கிறார்.

பின்பு இந்த நபிமொழியின் இறுதிப்பகுதியில் வானவர்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடம் இதற்கான விளக்கத்தைக் கூறியதாக இடம்பெற்றுள்ளது. அது:

أَمَّا الرَّجُلُ الأَوَّلُ الَّذِي أَتَيْتَ عَلَيْهِ يُثْلَغُ رَأْسُهُ بِالحَجَرِ، فَإِنَّهُ الرَّجُلُ يَأْخُذُ القُرْآنَ فَيَرْفُضُهُ وَيَنَامُ عَنِ الصَّلاَةِ المَكْتُوبَةِ

# 6

## நபிமார்களும் பர்ஸக் [திரைமறைவு] நிலையும்

✿

1. அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்மீது ஸலவாத் சொல்லக்கூடியவரின் பெயரைக் குறிப்பிட்டு நபி ﷺ அவர்களிடம் தெரிவிப்பதற்காக அவர்களின் மண்ணறை உள்ள இடத்தில் அல்லாஹ் தஆலா ஒரு வானவரை நியமித்துள்ளான். அம்மார் இப்னு யாசிர் ؓ அவர்கள் கூறியது, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ اللَّهَ وَكَّلَ بِقَبْرِي مَلَكًا، أَعْطَاهُ أَسْمَاعَ الْخَلاَئِقِ، فَلاَ يُصَلِّي عَلَيَّ أَحَدٌ إِلَى يَوْمِ الْقِيَامَةِ، إِلاَّ أَبْلَغَنِي بِاسْمِهِ وَاسْمِ أَبِيهِ هَذَا فُلاَنُ بْنُ فُلاَنٍ قَدْ صَلَّى عَلَيْكَ

நிச்சயமாக அல்லாஹ் எனது மண்ணறைக்கு ஒரு வானவரை பொறுப்பாக்கி அவரிடம் மக்களின் பெயர்களைக் கொடுத்துள்ளான். மறுமைநாள் வரை எவர் என்மீது ஸலவாத் கூறினாலும் அவருடைய பெயரையும் அவருடைய தந்தையின் பெயரையும் குறிப்பிட்டு 'இன்னாரின் மகன் இன்னார் உங்கள்மீது ஸலவாத் கூறினார்' என்று எனக்கு எடுத்துரைப்பார்.[11] (முஸ்னதுல் பஸ்ஸார் 1274)

2. நபிமார்களின் உடலை பூமி தின்பதில்லை. அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ مِنْ أَفْضَلِ أَيَّامِكُمْ يَوْمَ الْجُمُعَةِ، فِيهِ خَلَقَ اللَّهُ آدَمَ، وَفِيهِ قُبِضَ، وَفِيهِ النَّفْخَةُ، وَفِيهِ الصَّعْقَةُ، فَأَكْثِرُوا عَلَيَّ مِنَ الصَّلاَةِ فِيهِ، فَإِنَّ صَلاَتَكُمْ مَعْرُوضَةٌ عَلَيَّ، قَالُوا: وَكَيْفَ تُعْرَضُ صَلاَتُنَا عَلَيْكَ وَقَدْ أَرَمْتَ؟، فَقَالَ: 'إِنَّ اللَّهَ جَلَّ وَعَلَا حَرَّمَ عَلَى الْأَرْضِ أَنْ تَأْكُلَ أَجْسَامَنَا

உங்களின் நாள்களிலேயே மிகச் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை

---

11 ஸஹீஹ் அத்தர்கீப் வத்தர்ஹீப் (1667) நூலில் ஷெய்க் அல்பானீ அவர்கள் இதனை ஹஸன் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (மேலும் பார்க்க: ஸில்ஸிலத்துல் அஹாதீஸ் அஸ்ஸஹீஹா 1350)

# 7

## மரணத்துக்குப் பின் பயனளிப்பவை

✿

1. ஜனாஸா தொழுகை. அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

مَا مِنْ مَيِّتٍ تُصَلِّي عَلَيْهِ أُمَّةٌ مِنَ الْمُسْلِمِينَ يَبْلُغُونَ مِائَةً، كُلُّهُمْ يَشْفَعُونَ لَهُ، إِلَّا شُفِّعُوا فِيهِ

மரணித்த ஒருவருக்காக முஸ்லிம்களில் நூறு பேர்கொண்ட கூட்டத்தினர் தொழுது அவர்கள் அனைவரும் (அத்தொழுகையில் செய்யும் பிரார்த்தனை மூலம்) அவருக்காகச் சிபாரிசு செய்தால் அவர் விசயத்தில் அவர்களின் சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்படாமல் இருப்பதில்லை. (அறிவிப்பு: ஆயிஷா ؓ, முஸ்லிம் 947)

مَا مِنْ رَجُلٍ مُسْلِمٍ يَمُوتُ فَيَقُومُ عَلَى جِنَازَتِهِ أَرْبَعُونَ رَجُلًا لَا يُشْرِكُونَ بِاللهِ شَيْئًا إِلَّا شَفَّعَهُمُ اللهُ فِيهِ

முஸ்லிமான ஒரு மனிதர் மரணித்து அவரது ஜனாஸாவில் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்காத நாற்பது நபர்கள் நின்று தொழுதால் (அந்தத் தொழுகையில் பிரார்த்தனை மூலம்) அவர் விசயத்தில் அவர்கள் செய்யும் சிபாரிசை அல்லாஹ் ஏற்காமல் இருப்பதில்லை. (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ؓ, முஸ்லிம் 948)

2. மரணித்தவர் அடக்கம் செய்யப்பட்ட பின்பு ஓர் ஒட்டகம் அறுக்கப்பட்டு அதன் இறைச்சி பங்கிடப்படும் அளவுக்கான நேரம் தனது மார்க்க சகோதரர்கள் மூலம் ஆறுதல் பெறுவார். அம்ர் இப்னு அல்ஆஸ் ؓ அவர்கள் இது தொடர்பாகக் கூறியுள்ளதை முன்னர் பார்த்துள்ளோம். அதில் கூறப்படுவது:

فَإِذَا دَفَنْتُمُونِي فَشُنُّوا عَلَيَّ التُّرَابَ شَنًّا، ثُمَّ أَقِيمُوا حَوْلَ قَبْرِي قَدْرَ مَا تُنْحَرُ جَزُورٌ وَيُقْسَمُ لَحْمُهَا، حَتَّى أَسْتَأْنِسَ بِكُمْ، وَأَنْظُرَ مَاذَا أُرَاجِعُ بِهِ رُسُلَ رَبِّي

என்னை நீங்கள் அடக்கம் செய்தால் மண்ணைத் தூவி விட்டு, ஓர் ஒட்டகம் அறுக்கப்பட்டு அதன் இறைச்சி பங்கிடப்படும்